# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2017*, ஓகத்து மாதம் *31* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *34.00*** **தபாற் செலவு : ரூபா *20.00***

**2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்**

[*2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 35/2015*

***(262ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2017ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*262 ஆம் அத்தியாயத்தின் 3இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (262ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 3இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அப்பிரிவில் காணப்படுகின்ற "ஆங்கிலத்தில் அகரவரிசை எழுத்தை" அத்துடன் "அல்லது அகரவரிசை எழுத்தையும்" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "வட்டாரம் ஒவ்வொன்றினதும் புதிய எல்லைகள், பெயர்கள், இலக்கங்கள் அல்லது எழுத்துக்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வட்டாரம் ஒவ்வொன்றினதும் புதிய எல்லைகள், பெயர்கள் மற்றும் இலக்கங்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***4.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், (ஈ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்திக்குப் பின்னர் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-*

*"(ivஅ) பகிரங்க அலுவலரொருவர் எந்த உள்ளூர் அதிகார சபைப் பிரதேசத்தில் நியமனத்தை நாடுகின்றாரோ அந்த உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தினுள்*

அத்தகைய உள்ளூர் அதிகாரசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் குறைந்தபட்சம் ஓராண்டுக்கு முன்னரேனும் சேவையாற்றாதொழியாதுள்ள வெளிக்கள அடிப்படையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பகிரங்க அலுவலரொருவர்.

இவ்வுட்பந்தியின் நோக்கத்துக்காக, "வெளிக்கள அடிப்படையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பகிரங்க அலுவலர்" என்பது, அவரது தொழிலின் நோக்கெல்லையினுள் ஏதேனும் அபிவிருத்தி, சேமநல, பொருளாதார, சமூக, சுகாதார அல்லது அத்தகைய வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எவரேனுமாளை உள்ளடக்குதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவுக்கான கடைசிக் காப்பு வாசகத்தின் (ii)ஆம் பந்தியில் "பெயர் ஒன்றினாலும் ஆங்கிலத்தில் அகரவரிசை எழுத்தொன்றினாலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெயர் ஒன்றினாலும் இலக்கமொன்றினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) "வாக்கெடுப்பு மாவட்டங்களாகப்", "வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும்", மற்றும் "வாக்கெடுப்பு மாவட்டம்" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவிற் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, முறையே "வாக்கெடுப்பு மாவட்டங்களாகப்", "வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும்" மற்றும் "வாக்கெடுப்பு மாவட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) பந்தி (இ)இல் "வாக்கெடுப்பு மாவட்டம்" மற்றும் "அம்மாவட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "வாக்கெடுப்பு மாவட்டம்" மற்றும் "அவ்வாக்கெடுப்பு மாவட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில் "ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (2ஆ) என்னும் உட்பிரிவில் "ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு "ஒரு தேர்தற் பிரதேசம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் குறித்தொதுக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும், ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் இருக்குமிடத்து ஒரு வேறுபிரித்துக்காட்டும் இலக்கமும் குறித்தொதுக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஊ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஊ என்னும் பிரிவு இத்தால் நீக்கிவிடப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"மொத்த எண்ணிக்கையினரான பெண் உறுப்பினர்கள்.

27ஊ. (1) இக்கட்டளைச்சட்டத்தில் முரணான ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபையிலுமுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினரின் இருபத்தைந்து சதவீதத்திற்கு குறையாதோர் பெண் உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், ஓர் உள்ளூர் அதிகாரசபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் இருபத்தைந்து சதவீதமாக அமைகின்ற எண்ணிக்கை ஒரு முழு எண்ணாகவும் பின்னமாகவும் உள்ளவிடத்து, முழுவெண்ணானது இப்பிரிவின் நோக்கத்துக்காக இருபத்தைந்து சதவீதமாக அமையவேண்டிய எண்ணாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தேர்தல்கள் ஆணையாளர் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபை தொடர்பிலும்பெயர் குறித்து

நியமிக்கப்படவேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இக்கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி" என்னும் சொற்களிலிருந்து தொடங்கி "தரப்பட்டுள்ள படிவத்தில்,-" என்னும் சொற்களுடன் முடிவடைகின்ற எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழு, ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் எல்லா வட்டாரங்களும் தொடர்பில் இரண்டு நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எல்லா வட்டாரங்களும் தொடர்பில் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்கள், பொருளளவில் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவங்களில் பின்வருவோரின் பெயர்களைக் எடுத்துக்கூறி, அத்தகைய உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக, முதலாவது நியமனப் பத்திரத்தில் தேர்ந்தெடுக்கப்படவேண்டியதும் தெரிந் தனுப்பப்படவேண்டியதுமான உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பத்து சதவீதத்துக்குக் குறை யாதவர்களும் மேலதிக பெயர்நியமனப்பத்திரத்தில் மொத்த எண்ணிக்கையினரான வேட்பாளர்களுள் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாதவர்களும், பெண் வேட்பாளர்களாக இருக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும்";

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"(அ) அந்த உள்ளூர் அதிகாரசபையின் வட்டாரம் ஒவ்வொன்று தொடர்பில் பெயர்குறித்து நியமிக் கப்படும் வேட்பாளர்கள்; அவ்வெண்ணிக்கை யானது அவ்வுள்ளூர் அதிகாரசபையின் மொத்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் அறுபது சதவீதத்துக்குச் சமமாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், இப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறுபது சதவீதமாக அமைகின்ற எண்ணிக்கை ஒரு முழு வெண்ணாகவும் பின்னமாகவும் இருக்கு மிடத்து, முழுவெண்ணானது, இப்பந்தியின் நோக்கத்துக்காக, அறுபது சதவீதமாக அமை கின்ற எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(4) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "எந்த வேட்பாளர்களிடையேயிருந்து" என்னும் சொற்களி லிருந்து தொடங்கி அப்பந்தியின் முடிவுவரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "உள்ளூர் அதிகார சபையின் மொத்த எண்ணிக்கையினரான உறுப்பினர் களின் நாற்பது சதவீதத்துக்குச் சமமானவாறு தெரிந் தனுப்பப்படவேண்டிய வேட்பாளர்களாகப் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய அத்தகைய எண்ணிக் கையினரான மேலதிக ஆட்கள் மற்றும் மூன்று மேலதிக ஆட்கள்:" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(5) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் "முப்பது சதவீதத்திற்குச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நாற்பது சதவீதத்திற்குச்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(6) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(2அ) ஆணையாளர், வர்த்தமானியில் வெளியிடப் படும் அறிவித்தல்மூலம், (2) ஆம் உட்பிரிவில் குறித் துரைக்கப்பட்டவாறு ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையினதும் எல்லா வட்டாரங்களும் தொடர்பில் முதலாவது நியமனப்பத்திரத்திலும் மேலதிக நியமனப் பத்திரத்திலும் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய பெண் வேட்பாளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை யைக் குறித்துரைத்தல் வேண்டும். பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய பெண் வேட்பாளர்களின்

மொத்த எண்ணிக்கை, முதலாவது நியமனப்பத்திரத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதும் தெரிந்தனுப்பப்படவேண்டியதுமான உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பத்து சதவீதத்திற்குக் குறையாததாகவும் மேலதிக நியமனப்பத்திரத்தில் வேட்பாளர்களின் எண்ணிக்கையின் ஐம்பது சதவீதத்துக்கும் குறையாததாகவும் உள்ள அத்தகையதாகவிருந்து ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, முழுவெண்ணானது இப்பிரிவின் நோக்கங்களுக்காகத் தேவைப்பட்ட எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(7) அப்பிரிவின் (2ஆ) என்னும் உட்பிரிவில் "நியமனப் பத்திரம் இணைப்பிரதியில் "பிரதி" என்ற சொல் தெளிவாக எழுதப்பட்டு இணைப்பிரதியில் தயாரிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(8) அப்பிரிவின் (2ஈ) என்னும் உட்பிரிவில் "மொத்த எண்ணிக்கையின் இருபத்தைந்து சதவீதம் பெண்களையும் இளைஞர்களையும் கொண்டிருக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "மொத்த எண்ணிக்கையின் முப்பது சதவீதத்துக்குக் குறையாது இளைஞர்களைக் கொண்டிருக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(9) அப்பிரிவின் (2உ) என்னும் உட்பிரிவில்,

(அ) "இருபத்தைந்து சதவீதமாக" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப்பதிலாக, "முப்பது சதவீதமாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "(2ஆ) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(2ஈ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "இடையே அத்துடன் எவ்விடயத்திலும் பெயர் நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு நேர்முற்போந்த நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல், நியமனப்பத்திரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இடையே (அத்துடன் எவ்விடயத்திலும் பெயர்நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு நேர்முற்போந்த நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல்) நியமனப்பத்திரம்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரத்து ஐந்நூறு ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "இருபதினாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "சுயேச்சைக் குழுவின் தலைவரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சுயேச்சைக் குழுவின் தலைவரால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு, அப் பிரிவின்(4)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(1) "வட்டாரத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வட்டாரத்தில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "அத்தகைய உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில்" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "அத்தகைய உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "28 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப் படுத்தப்பட்டவாறு உறுதிப்படுத்தப்படாதவிடத்து'', என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "28 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப் பட்டவாறு உறுதிப்படுத்தப்படாதவிடத்து; அல்லது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(ஊ) இக்கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின்கீழ் பெயர்குறித்த நியமிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான பெண் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையினரைக் கொண்டிராத,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பெயர்களைக்கொண்ட ஒரு தனிநிரலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெயர்களைக் கொண்ட நியமனப்பத்திரங்களும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின் றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து" என்பது முதல் "அந்த ஆள்" என்பது வரையான சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப்பதிலாக, "வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து இறந்த அத்தகைய வேட்பாளர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியை அல்லது சுயேச்சைக்குழுவை சேர்ந்திருந்தாரோ அந்த அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக்குழுவின் குழுத் தலைவர்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "அப்பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரத்துக்கான தேருநர் நிரலில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அப்பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரத்துக்கான தேருநர் நிரலில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(இ) வட்டாரத்தின் பெயரும் இலக்கமும்;".

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "வாக்கெடுப்பு மாவட்டத்திலுமுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்பு மாவட்டத்திலுமுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவு, "ஏதேனும் வட்டாரத்துக்கான" மற்றும் "ஏதேனும் வட்டாரத்துக்கென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "ஏதேனும் வட்டாரத்துக்கான" மற்றும் "அவ்வட்டாரத்துக்கென" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அவ்வட்டாரத்திற்கென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வட்டாரத்திற்கென" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "சிங்களத்தில் அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டதாக, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் சுட்டிக்காட்டப்பட்டவாறாக வேட்பாளர்களின் பெயர் முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவைத் திருத்துதல்.

களைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றையும், அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் குறித்தொதுக் கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறிவித்தலொன்றையும், அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் குறித்தொதுக் கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் உள்ளவிடத்து, பெயர்நியமனப் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறாக அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட வேறுபிரித்துக்காட்டும் இலக்கத்தையும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 47ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(அ) தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்களைச் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிங்கள அகரவரிசைப்படி ஒழுங்கு படுத்தப்பட்டதாகக் கொண்டிருத்தல் வேண்டுமென் பதுடன், அத்தகைய ஒவ்வொரு கட்சியினதும் பெயருக்கு எதிராக அத்தகைய ஒவ்வொரு கட்சிக்குமெனக் குறித் தொதுக்கப்பட்ட சின்னத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அதனை உடனடுத்து, சுயேச்சைக் குழுக்கள் எவையேனும் அத்தகைய தேர்தலில் போட்டியிடு மாயின், அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் தனித் தனியே "சுயேச்சைக் குழு" என்ற சொற்களும், வரிசைக் கிரமத்தில் வேறுபடுத்திக்காட்டும் இலக்கமும் எழுதப் பட்டு அத்தகைய குழுவின் வேறுபிரித்துக் காட்டும் இலக்கத்துக்கெதிராக அத்தகைய குழு ஒவ்வொன் றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட சின்னத்தையும் தருதல் வேண்டும் என்பதுடன் ஒரு வாக்காளர் தமது வாக்கை அளிப்பதற்கென ஒவ்வொரு சின்னத்துக்கும் எதிராக ஒரு வெற்றுக்கூடு இருத்தலும் வேண்டும். ஒரு வாக் காளர் அவரது வாக்கை அதற்கென ஏற்பாடு செய்யப் பட்ட கூட்டினுள் இடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் ''ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்குகளை எண்ணுதலானது, அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் இடம்பெறுதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு பிரிவிலும், வாக்குகளை எண்ணுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்குகளை எண்ணுதலானது, இயைபான தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறு இடம்பெறுதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "பணியாற்றுதலும் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பணியாற்றுதலும் வேண்டும். எவ்வாறாயினும், அந்நிலையத்தின் வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினர் அல்லது அத்தகைய பணியாட்டொகுதியினரின் ஓர் அலுவலர், அத்தகைய பணியாட்டொகுதிக்கு அல்லது அத்தகைய அலுவலருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப்புரிய இயலாதவராக உள்ளார் அல்லது ஒரு வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினராக அல்லது அத்தகைய பணியாட்டொகுதியினரின் ஓர் அலுவலராக அவரின் கடமைகளைப் புரிவதற்குப் பொருத்தமற்றவர் எனத் தெரிவத்தாட்சி அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினரின் இடத்துக்கு வேறொரு வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினரை அல்லது அப்பணியாட்டொகுதியினரின் அத்தகைய அலுவலரின் இடத்துக்கு வேறோர் அலுவலரை நியமிக்கலாம்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், ''தேர்தல்கள் ஆணையாளர்'' என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"அல்லது ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்துக்கு நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலர் அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப் புரிய இயலாதவராக உள்ளாரென அல்லது அவர் ஒரு வாக்கெண்ணும் அலுவலராக அவரது கடமைகளைப்புரிவதற்குப் பொருத்தமற்றவரெனத் தெரிவத்தாட்சி அலுவலர் அபிப்பிராயப்படுவாராயின், அவர் முதற்சொல்லப்பட்ட ஆளின் இடத்தில் வேறு எவரேனும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரை அல்லது ஓர் உதவித் தெரிவத் தாட்சி அலுவலரை நியமிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "மேற்பார்வை செய்வதற்குத் தெரிவத்தாட்சி அலுவலரினால் நியமிக்கப்பட்ட உதவித்தெரிவத்தாட்சி அலுவலருக்கு அத்தகைய நிகழ்வை அறிவித்தல் வேண்டுமென் பதுடன், அத்தகைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேற்பார்வை செய்யும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்மூலம் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அத்தகைய நிகழ்வை அறிவித்தல் வேண்டுமென்பது டன், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலர்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "போதிய அறிவித்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "போதிய அறிவித்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அதன்பின்னர்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "உதவித் தெரிவத் தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறாகப் புதிய இடத்தில் வாக்கெண்ணுதலானது," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "புதிய இடம்பற்றித் தெரிவத் தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்டபின்னர், மேற்பார்வை செய்கின்ற உதவித்தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறாகப் புதிய இடத்தில் வாக்கெண்ணுதலானது," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "வட்டாரத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வட்டாரத்தில்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 64ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "வட்டாரத்துக்குப்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வட்டாரத்துக்குப்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "அறுபத்திநான்காம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களைப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறுபத்திநான்காம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங் களையும் இதற்கான ஒன்பதாம் அட்டவணையின் 28(இ) என்னும் ஒழுங்குவிதியின் கீழான வெளிப்படுத்துகையையும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அஅ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அஅ என்னும் பிரிவு இத்தால் நீக்கிவிடப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"பெண் உறுப்பினர் களைப் பகிர்வு செய்தல்.

65அஅ. (1) ஓர் உள்ளூர் அதிகாரசபைக்காக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியி லிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்

ணிக்கை ஒரு மேன்மிகையை விளைவித்து 65 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப் பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுமிடத்தும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை எவரேனும் பெண் உறுப்பினரை உள்ளடக்காதவிடத்தும், அப்போது, இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு ஓர் உள்ளூர் அதிகார சபைப் பிரதேசத்தில் பெறப்பட்ட மொத்த எண்ணிக்கையினவான வாக்குகளின் இருபது சதவீதத்துக்குக் குறைவானதைப் பெற்று, மூன்றுக்குக் குறைவான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அல்லது தெரிந்தனுப்பப்பட்டவர்களாகக் கொண்டிருக்குமிடத்து, அப்போது இப்பிரிவின் (3) ஆம், (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) இப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தவிர்ந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளிலிருந்தும் சுயேச்சைக் குழுக்களிலிருந்தும் ஒவ்வோர் உள்ளூரதிகார சபைக்கும் தோந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் பகிர்வு, அத்தகைய உள்ளூரதிகாரசபையின் எல்லா வட்டாரங்களிலும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட

அரசியற் கட்சிகளினாலும் சுயேச்சைக் குழுக்களினாலும் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையைக் கவனத்துட் கொண்டு தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 99அ என்னும் உறுப்புரையில் தரப்பட்டுள்ள பகிர்வுமுறையானது ஏற்ற மாற்றங்களுடன் அதற்கேற்புடையதாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு தவிர்ந்த ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பகிர்வு செய்யப்பட்ட எண்ணிக்கையைவிட குறைவாகவிருக்குமிடத்து, அப்போது, உறுப்பினர்களின் எண்ணிக்கையிலான பற்றாக்குறை தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது உறுப்பினராகவிருப்பதற்கு 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையற்றவராகவுள்ள பெண் வேட்பாளர்கள் தவிர, முதலாவது நியமனப் பத்திரத்தில் அல்லது மேலதிக நியமனப் பத்திரத்தில் உள்ள பெண் வேட்பாளர்களிலிருந்து தெரிந்தனுப்பப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) உட்பிரிவுகள் (2), (3), (4) மற்றும் (5) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2) ஓர் உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்தில் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் எல்லா வேட்பாளர்களினாலும் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை, அந்த உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்திற்குத் தோந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரிவிடுகையிலிருந்து விளைகின்ற எண், (ஏதேனும் பின்னத்தைக் கவனத்துட் கொள்ளாமல்) இதனகத்துப்பின்னர் இப்பிரிவில், "தகைமையளிக்கும் எண்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.";

(2) (i) ஆறாம் உட்பிரிவை (3) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(ii) மீள இலக்கமிடப்பட்ட (3) ஆம் உட்பிரிவில், "ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் எஞ்சிய வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தம் விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் அந்த உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படுவதற்கு உரித்துடைய ஆட்களின் எண்ணிக்கையை ஆய்ந்தறிவதற்கு அப்போது தகைமையளிக்கும் எண்ணால் பிரிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அந்தந்த உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்திலும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினதும் சுயேச்சைக்குழுவினதும் வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தம், அவ்வுள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கையை நிச்சயிப்பதற்கென அப்போது தகைமையளிக்கும் எண்ணால் பிரிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) மூன்றாம் உட்பிரிவுக்குப்பின்னர் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் அந்த உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு உரித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையை நிச்சயிப்பதன்மேல், அந்த உள்ளூர் அதிகாரசபைக்காக அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை-

(அ) (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுகின்றதாகக் காணப்படின், அப்போது, அத்தகைய மேன்மிகை, தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) (3) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் குறைவாகவுள்ளதாகக் காணப்படின், அப்போது, அத்தகைய மேலதிக எண்ணிக்கையினரான உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவர்களாகவிராத வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப்பத்திரத்திலுள்ள அல்லது மேலதிக நியமனப்பத்திரத்திலுள்ள வேட்பாளர்களுலிருந்து அந்தந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரினால் தெரிந்தனுப்பப்படுதல் வேண்டும்.";

(4) (i) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவாக மீளஇலக்கமிடுவதன் மூலமும்;

(ii) மீளஇலக்கமிடப்பட்ட (5) ஆம் உட்பிரிவில்-

(அ) "ஐந்தாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) "(3) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப் பட்டவாறு" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(4) ஆம் உட் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும் ;

(இ) "(6) ஆம் உட்பிரிவின்கீழ் ஆய்ந்தறியப் பட்டவாறு" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(3) ஆம் உட்பிரி வின் கீழ் ஆய்ந்தறியப்பட்டவாறு" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(5) (i) அப்பிரிவின் (8) ஆம், (9) ஆம் உட்பிரிவுகளை முறையே (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளாக மீளஇலக்கமிடுவதன் மூலமும்;

(ii) மீளஇலக்கமிடப்பட்ட (6) ஆம் உட்பிரிவில், "விடயத்திற்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு எந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு உரித்துடையதாகின்றதோ அந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களை (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆய்ந்தறியப்பட்டவாறு உறுப்பின ரொருவரைத் தெரிவுசெய்வதற்கு உரித்துடைய விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வுட்பிரிவின்கீழ் தெரிவு செய்யப்படவேண்டிய ஆட்களின் பெயர்களை விடயத்திற்கேற்ப (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம்

பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேசச் சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமனப்பத்திரத்தில் எந்த ஆட்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டனவோ அந்த ஆட்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்குமாறு விடயத்திற்கேற்ப அத்தகைய செயலாளருக்கு அல்லது தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"விடயத்திற்கேற்ப, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழும் 65அஅ என்னும்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழும் ஆய்ந்தறியப்பட்டவாறு பெண் உறுப்பினர்களுட்பட எந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாகின்றதோ அந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களை, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவர்களாகவிராத முதலாவது நியமனப்பத்திரத்திலுள்ள அல்லது மேலதிக நியமனப்பத்திரத்திலுள்ள வேட்பாளர்களிடையேயிருந்து தெரிந்தனுப்பும்படி, விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும்.";

(6) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது தெரிந்தனுப் பப்படுவதற்கு உரித்துள்ள வேட்பாளர்கள்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இக்கட்ட ளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக் கப்படுவதற்குத் தகைமைபெற்ற வேறு எவரேனும் ஆளை" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதி லாக, "தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்ற வர்களாகவிராத வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப்பத்திரத்திலுள்ள அல்லது மேலதிக நியமனப் பத்திரத்திலுள்ள வேறெவரேனும் வேட்பாளரை" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(ஆ) (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்-

(i) "அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி யால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களிடையேயிருந்து அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின் கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்ற வர்களாகவிராத வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப்பத்திரத்திலுள்ள அல்லது மேலதிக நியமனப்பத்திரத்திலுள்ள வேறெவ ரேனும் வேட்பாளரை" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்;

(ii) "(252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ், (255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(iii) "எந்த ஆளும்" என்னும் சொற்களிலிருந்து தொடங்கி "வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்." என்னும் சொற்கள் வரையான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்:

ஆயின், ஓர் உள்ளூர் அதிகாரசபையின் பெண் உறுப்பினர் ஒருவரின் விடயத்தில் வெற்றிடம் ஒன்று ஏற்படுமிடத்து, அப்போது, அத்தகைய வெற்றிடம், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவர்களாகவிராத பெண் வேட்பாளர்கள் நீங்கலாக முதலாவது நியமனப் பத்திரத்திலிருந்து அல்லது மேலதிக நியமனப் பத்திரத்திலிருந்து பெண்ணொருவரின் நியமனத்தின்மூலம் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும்.";

(இ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்.";

(ஈ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) முதலாவது நியமனப்பத்திரத்திலும் மேலதிக நியமனப்பத்திரத்திலுமுள்ள வேட்பாளர்களிலிருந்து (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு ஆளெவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு எஞ்சியிராதிருக்குமிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபை எந்தத் தேர்தல் பிரதேசத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தல் பிரதேசத்துக்காக நியமிக்கப்பட்ட தெரித்தாட்சி அலுவலர், அவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் அவ்வெற்றிடம் ஏற்பட்டுள்ள வட்டாரத்தில் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் தகைமைகொண்டுள்ள வேறெவரேனுமாளை பெயர்குறித்து நியமிக்கும்படி, எந்த உறுப்பினரின் வெற்றிடம் ஏற்பட்டதோ அந்த உறுப்பினர் சேர்ந்தவராகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக்குழுவின் தலைவருக்கு அவ்வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் அவ்வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்:

ஆயின், ஓர் உள்ளூர் அதிகாரசபையின் பெண் உறுப்பினர் ஒருவரின் விடயத்தில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, அப்போது அத்தகைய வெற்றிடம், இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் தகைமைகொண்டுள்ள பெண் வேட்பாளரொருவரின் நியமனத்தின்மூலம் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) "அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் பதவிக்காலத்தின் போது வெற்றிடமானதாகுமிடத்து ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய உள்ளூர் அதிகார

சபையின் பதவிக்காலத்தின்போது வெற்றான தாகுமிடத்து, உள்ளூராட்சி ஆணையாளர் அத்தகைய நிகழ்வைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலர்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "ஆணையாளருக்கு அதனை முப்பது நாட்களுக்குள் அறிவித்தலும் வேண்டும். அத்தகைய தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் மீது ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதனை முப்பது நாட்களுக்குள் அறிவித்தலும் வேண்டும். அத்தகைய தீர்மானம் கிடைக்கப் பெற்றதன்மீது தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "ஆணையாளர் ஆகக்கூடுதலான வாக்குகளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தெரிவத்தாட்சி அலுவலர் ஆகக் கூடுதலான வாக்குகளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "அத்தகைய வெற்றிடம் அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க நிரப்பப்படுமிடத்தும், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினரே அதன்பின்னர் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளின் கீழ் மாநகர முதல்வராக அவரது பதவியிலிருந்து விலகுமிடத்தும், அவ்வாறு உருவாக்கப்பட்ட வெற்றிடம் இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையைப் பின்பற்றி நிரப்பப்படுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாநகர முதல்வர் பதவியிலான அத்தகைய வெற்றிடம் இக்கட்டளைச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறையின் நியதிகளின்படி நிரப்பப்படுமிடத்தும், அத்தகைய வெற்றி

டத்தை நிரப்புவதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினரே தமது பதவியிலிருந்து விலகுமிடத்தும், அதன்பின்னர் உருவாக்கப்பட்ட வெற்றிடம் இக்கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையின் நியதிகளுக்கிணங்க நிரப்பப்படுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஆரம்பிக்கப்படுவதற்கு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "தொடங்குவதற்கு" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**30**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின்(அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(அ) (i) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது ஏதேனும் சுயேச்சைக் குழுவுக்குச் சாதகமாக வாக்களிப்பதற்கு வாக்காளர்கள்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற பயனைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் பகிரங்க நிறுவனத்திலான நியமனங்கள் எவையும் செய்யப்படுதலாகாது;

(ii) உட்பந்தி (i) இல் எது எவ்வாறிருப்பினும், அவசரமாகவுள்ள எந்த அத்தியாவசியமான சேவைகளைப் பிற்போடுதல் பொதுமக்களின் வழமையான வாழ்க்கையைப் பாதிக்குமோ அல்லது பொதுமக்களுக்குப் பாரதூரமான இடையூறுகளை அல்லது தீங்கை விளைவிக்குமோ அந்த அத்தியாவசியமான சேவைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அத்தகைய நிறுவனத்திலான ஏதேனும் நியமனம் செய்யப்படலாம்; அத்துடன்"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31**. இரண்டாயிரத்துப் பன்னிரண்டாமாண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) 'அங்கீகரிக்கப்பட்ட சின்னம்' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்பது, விடயத்துக் கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று தொடர்பாக அல்லது சுயேச்சைக் குழுவொன்று தொடர்பாக, விடயத்துக்கேற்ப, அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அதிகாரமளிக் கப்பட்ட முகவராகவிருப்பதற்கு அந்த அங்கீ கரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரினால் அல்லது அந்தச் சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரினால் எழுத்தில் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டவரும், அவரது அதிகாரவளிப்பு, எந்தத் தேர்தல் இடப்பரப்புத் தொடர்பில் தேர்தல் நடைபெறுகின்றதோ அந்தத் தேர்தல் இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்குப் பெயர்நியமனக் காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் குறைந்தபட்சம் எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரேனும் அத்தகைய செயலாளரினால் அல்லது அத்தகைய குழுத்தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவுள்ளவருமான ஆளொருவர் என்று பொருளாகும்;".

(2) "மாநகரசபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

" "மேன்மிகை" என்பது, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு, இக்கட்டளைச்சட்டத்தின் 65ஆ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்துள்ளதாகவுள்ள எண்ணிக்கைக்கு விஞ்சுதலாக அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து உள்ளூர் அதிகாரசபையொன்றுக்காகத் தேர்ந் தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை என்று பொருளாகும்;".

(3) "அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பாராளுமன்ற இடாப்பு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக் கொடை, கடன் என்றவகையாக அல்லது வேறு வகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

"பகிரங்க நிறுவனம்" என்பது, ஓர் அமைச்சையும், அரசாங்கத் திணைக்களத்தையும், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் ஒரு மாகாண சபையினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தையும், ஓர் உள்ளூர் அதிகார சபையையும், அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலையும் அல்லது வேறு பொறுப்புமுயற்சியையும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டவொரு கம்பெனியில், அரசாங்கம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை பங்குகளின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டவற்றை வைத்திருக்கின்ற அக்கம்பெனியையும் உள்ளடக்கும்;".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

“**முதலாம் அட்டவணை** [பிரிவு 28(2)]

### I - நியமனப்பத்திரப் படிவம்

............................ மாநகரசபை/நகரசபை/பிரதேசசபை.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றாக/வேட்பாளர்களின் சுயேச்சைக் குழுவொன்றாக உள்ள (சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் .............. ............................ என்பவர் குழுத் தலைவராகவுள்ளார்), ............. .......................................... கட்சி, ............................................... மாநகரசபையின்/நகரசபையின்/பிரதேசசபையின் உறுப்பினர்களினது தேர்தலுக்கான வேட்பாளர்களாகப் பின்வரும் ஆட்களை இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றது.

**I– வேட்பாளர்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| வட்டாரத்தின் பெயரும் இலக்கமும் "*" | பெயர் - ஆண்கள்/ பெண்கள் (தேசிய அடையாள அட்டையில் அல்லது பிறப்புச் சான்றிதழில் சுட்டிக் காட்டப்பட்டவாறு) | தேசிய அடையாள அட்டை இல. | வதிவிட முகவரி | தொழில் | இளைஞர் வேட்பாளரா அல்லரா என்பது (இ) | வேட்பாளரின் சம்மதத்தைக் குறிப்பிடுகின்றகையொப்பம் | ஆண்/பெண் |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

### II – மேலதிக நியமனப்பத்திரம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| பெயர் ஆண்கள் பெண்கள் (தேசிய அடையாள அட்டையில் அல்லது பிறப்புச் சான்றிதழில் சுட்டிக் காட்டப்பட்டவாறு) | தேசிய அடையாள அட்டை இல. | வதிவிட முகவரி | தொழில் | இளைஞர் வேட்பாளரா அல்லரா என்பது | மேலதிக வேட்பாளர்களின் சம்மதத்தைக் குறிப்பிடுகின்றகையொப்பம் | ஆண் /பெண் |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

இந்நியமனப்பத்திரத்தில் பெயர்கள் காணப்படுகின்ற எல்லா இளைஞர் வேட்பாளர்களும் கட்டளைச்சட்டத்தின் 89ஆம் பிரிவில் விதிக்கப்பட்ட வயதெல்லையினுள் உள்ளானவர்களென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் /சுயேச்சைக் குழுவின் தலைவர்.

பெயர் ..................................................

முகவரி ................................................

அலுவலகமுறையான இலச்சினை

அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரான/சுயேச்சைக் குழுவின் தலைவரான மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ....................... என்பவரினால் எனது முன்னிலையில் 20............ ஆம் ஆண்டு .................... மாதம் ............... ஆந்நாளாகிய இன்று ........................... இல் கையொப்பமிடப்பட்டது.

...................................................

(சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்)

அலுவலகமுறையான இலச்சினை

முகவரி .....................................

* ஒரு பல்லுறுப்பினர் வட்டாரத்தின் விடயத்தில் ஒரு நட்சத்திரக் குறியை (*) இடுவதன் மூலமும் இரண்டு உறுப்பினர்களின் தேர்தல் விடயத்தில் இயைபான கூட்டில் இரண்டு வேட்பாளர்களின் பெயர்களையும் அத்துடன் மூன்று உறுப்பினர்களின் தேர்தல் விடயத்தில் இரண்டு நட்சத்திரக் குறிகளையும் (**)இடுவதன்மூலமும் அத்தகைய மூன்று வேட்பாளர்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஒன்பதாம் அட்டவணையைத் திருத்துதல்.

**33.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஒன்பதாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டணையின் 17ஆம் ஒழுங்குவிதியில் "வாக்கெடுப்பு முடிவடைவதற்கு முன்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வட்டணையின் 18ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும்:-

"அஞ்சல் வாக்குச் சீட்டுக்களைக் கொண்டுள்ள மேலுறைகள் வட்டாரங்களின் படி தனிவேறாக்கப்படுதல்.

18. தெரிவத்தாட்சி அலுவலர், திறக்கப்படாத மேலுறைகளை அஞ்சல் வாக்காளர்கள் வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் இட்டபின்னரும் வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு முன்னரும் எந்நேரத்திலும் அஞ்சல் வாக்காளர்களின்

வாக்குச்சீட்டுப் பெட்டிகளைத் திறந்து அவற்றின் கண் அடங்கியுள்ள ஒவ்வொரு வட்டாரம் தொடர்பிலுமான மேலுறைகளைத் தனிவேறாக்குதல் வேண்டும். மேலுறைகள் வெவ்வேறாக்கப்பட்டவுடன், தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு வட்டாரம் தொடர்பிலுமான எல்லா மேலுறைகளையும் அத்தகைய வட்டாரத்துக்காகத் தனிவேறான ஓர் உறையிலிட்டு அதனை இலச்சினையிட்டு வாக்குச்சீட்டுக்களுடனும் வேறு பொருட்களுடனும் சேர்த்து, வாக்கெடுப்புத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று, இயைபான வட்டாரத்துக்கு என நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.";

(3) அவ்வட்டவணையின் 19ஆம் ஒழுங்கு விதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை எண்ணுதல்.

19. தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குச்சீட்டுக்களின் எண்ணுகை தொடங்குவதற்கு உடன்முன்னர், வட்டாரமொன்றுக்காக நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலரை, அத்தகைய வட்டாரத்துக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுக்களைக் கொண்டுள்ள இயைபான மேலுறைகளைத் திறந்து அவற்றை எண்ணுவதற்கு முற்படுமாறு செய்வித்தல் வேண்டும்.";

(4) அவ்வட்டவணையின் 20, 21, 22, 23 ஆம் ஒழுங்குவிதிகளையும் 24ஆம் ஒழுங்குவிதியின் (1)ஆம் பந்தியையும் நீக்கிவிடுவதன் மூலமும்;

(5) அவ்வட்டணையின் 28ஆம் ஒழுங்குவிதியின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(இ) ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் பற்றி எழுத்திலான வெளிப்படுத்துகையையும்;";

*(6)* அவ்வட்டவணையின் படிவம் அ இல்-

(அ) "வாக்கெடுப்புப் பிரிவிலும், வாக்கெடுப்பு மாவட்டத்திலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்பு மாவட்டத்திலும், வட்டாரத்தின் பெயரிலும் இலக்கத்திலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) "வாக்கெடுப்புப் பிரிவு எழுத்து:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்பு மாவட்ட இல.:" என்னும் சொற்களை இடு வதன்மூலமும்; அத்துடன்

(இ) "வாக்கெடுப்பு மாவட்ட இல:" என்னும் சொற் களுக்குப் பதிலாக "வட்டாரத்தின் பெயரும் இலக்கமும்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***34***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*